

முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டம் திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் கொளத்தூர் சட்டமன்ற தொகுதி திரு.வி.க. நகரில் மாபெரும் கால்பந்து போட்டி ம.அசோக் குமார் தலைமையில் நடைபெற்றது. போட்டியை கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் பிரியா ஆகியோர் கலந்து கொண்டு துவக்கி வைத்தனர். உடன் பகுதி செயலாளர்கள் ஐ.சி.எப். முரளிதரன், நாகராஜன், தமிழ் வேந்தன், கே.சந்துரு, சரிதாமகேஷ் குமார். டி.லோகேஷ், கவுன்சிலர் தாவூத், பி. துரைக்கண்ணன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

இன்று (மார்ச் - 12) மாலை 5 மணிக்கு சென்னை, ஓட்டல் அகார்டில்

# தி.மு.க. சொற்பொழிவாளர்கள் கூட்டம்

## தலைமைக் கழகம் அறிவிப்பு

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பணியாற்றிட வேண்டிய நெறிமுறைகளை வகுத்திடும் "தி.மு.க. சொற்பொழிவாளர்கள் கூட்டம்" இன்று (12.03.2024 செவ்வாய்க்கிழமை) மாலை 5.00 மணிக்கு சென்னை, தியாகராயநகர், ஜி.என்.செட்டி சாலையில் உள்ள "ஓட்டல் அகார்டில்' கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் - மாநிலங்களவைக்குழுத் தலைவர் திருச்சி சிவா, எம்.பி., அவர்கள் தலைமையில், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன், எம்.பி., அவர்கள் வரவேற்புரையாற்றிட, கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிட இருக்கின்றார்கள்.

அழைப்பிதழ் வரப் பெற்றவர்கள் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## 'வாட்ஸ் அப்'பில் வருவது




**எதுக்கு அக்கா நன்றி ?**

- - - - -

- **ஓட்டல் சாப்பாட்டுக்கு**
- **ஜி.எஸ்.டி. வரி போட்டாரே மோடி அதுக்காகாவா... ?**
- **உப்புக்கு ஜி.எஸ்.டி.யை ஏத்தி விட்டாரே அதுக்காகவா..?**
- **தயிருக்கும் வெண்ணெய் நெய்க்கும் வரி போட்டாரே அதுக்காகவா..?**
- **சுதந்திர இந்தியாவிலேயே முதன் முதலாக அரிசிக்கு ஜிஎஸ்டி போட்டு வயிற்றிலடிச்சாரே அதுக்காகவா..?**
- **சோறு பொங்குற அலுமினிய பாத்திரத்துக்கு வரிபோட்டாரே அதுக்காகவா..?**
- **எட்டணா சூடத்துக்கு 18% வரி போட்டு ஒத்தரூபா ஆக்கியுள்ளாரே! அதுக்காகவா?**
- **400 ரூபாவாயிருந்த கேஸை 1200 ஆக்கி தேர்தலுக்காக கொஞ்சம் விலை குறைச்சாரே அதுக்காகவா...?**
- **கியாஸ் மானியத்தை அனைவருக்கும் நிறுத்தி விட்டு மக்களுக்கு சேரவேண்டியதை கொள்ளையடிச்சாரே அதுக்காகவா..?**
- **எதுக்காக மோடிய நினைக்கணும் அக்கா...?**
- **கொஞ்சம் வெவரமா சொல்லுங்க..! வெவரங்கெட்டு உளறாதீங்க ....!**

வட்டச் செயலாளர் இரா.அரிதாஸ் தலைமை! இன்று -

# பெரம்பூர் வடக்கு 35 (அ) வட்டத்தில் பொதுக்கூட்டம்!

## இரா.ராஜீவ் காந்தி - மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் சிறப்புரை!

சென்னை, மார்ச் 12-

சென்னை வடக்கு மாவட்டம் - பெரம்பூர் வடக்குப் பகுதி 35 (அ) வட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இன்று (12.3.2024-செவ்வாய்க்கிழமை) மாலை 6.00 மணி அளவில் எருக்கஞ்சேரி - கிருஷ்ணமூர்த்தி சாலையில் நடைபெறும் இப்பொதுக்கூட்டத்திற்கு வட்டச் செயலாளர் இரா.அரிதாஸ் தலைமை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர் அ.முருகன், இரா.லீலா வேலு, எஸ். கோவர்த்தனன், மாசி. முருகன், எம்.பிரேம்குமார், ஏ. சாகுல் அமீது ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

டி.குலசேகரன், ஐ.பெலிக்ஸ் (எ) ஞானப்பிரகாஷ், ஜெ. ஜெயவேந்தன், பி.ஜமுனா, எஸ்.பி.நாகப்பன், த.பாஸ்கரன், எம்.ஆரோக்கியம், ஜெ.குமார், டி.எம்.கலையரசன் (எ) டைசன், எம்.ரூபன், ஜி.திருமுருகன், கே.சுரேஷ் கண்ணன், ஜெ.லோகநாதன், எஸ்.இராஜேந்திரன், ஏ.ஏழுமலை, செ.சாந்தகுமார், எம். ஜெயந்தி, எம்.அம்பிகா ஆகியோர் வரவேற்கின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் - கழக மாணவர் அணித் தலைவர் இரா.ராஜீவ் காந்தி, மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ., டாக்டர் கலாநிதி வீராசாமி, பெரம்பூர் தொகுதி தலைமையிடப் பார்வையாளர் வழக்கறிஞர் ஏ.சரவணன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

க.ஜெயராமன், இரா.கருணாநிதி, இரா.நரேந்திரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், பி.தயாளன், ஏ.ஆர்.ஆர். மலைச்சாமி, ந.சர்ப ஜெயாதாஸ், க.சர்மிளா காந்தி, இ.ஆனந்தி, ஏ.தமிழ்ச்செல்வன், டி.கமலக்கண்ணன், ப.மதிவாணன், க.அமுல், கே.பி.ராஜன், என்.கார்த்திக், மு.உமாபதி, கே.ஈ.செந்தமிழ்அரசு, சி.எஸ். இரவி, க.பாபு, த.ஆறுமுகம், ஆர்.எஸ்.மனோகரன், ஜி.மாரிமுத்து, கி.தினகரன், வி.முருகன் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்றனர்.

கழக தலைவர், பிறந்த நாள்! நந்தனம் கி.மதி எம்.சி. முன்னிலையில்

# 123 வது வட்டத்தில் 1071 பேருக்கு நல உதவிகள்!

## மயிலை த. வேலு எம்எல்.ஏ. வழங்குகிறார்-மு. இ. ஏழுமலை தலைமை!

சென்னை, மார்ச் 12 -

திமு கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின், 71வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 123-வது வட்ட கழகத்தின் சார்பில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி. மதி முன்னிலையில், வட்ட செயலாளர் மு. இ. ஏழுமலை தலைமையில், முதல் கட்டமாக 123வது வட்ட கழகத்திற்கு உட்பட்ட, பாகம் 62 கால்வாய்கரை சாலை, மற்றும் பாகம் 43, 44 பீமன்ன முதல் தெரு, பீமன்ன இரண்டாவது தெரு, உள்ளடங்கிய பகுதிகளில் வாழும், 325 பொதுமக்களுக்கு, சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மற்றும் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த. வேலு கடந்த வியாழக்கிழமை 07.03.24 அன்று பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இரண்டாவது கட்டமாக நேற்று 11.03.24 திங்கள்கிழமை இராமலிங்கேஷ்வரர் கோவில் தெரு பாகம் 27, 28 மற்றும் திருவள்ளுவர் சாலை சந்து பாகம் 36 அடங்கிய பகுதியில் வசிக்கும் 626 பொதுமக்களுக்கு மயிலை த. வேலு எம்.எல்.ஏ. நல உதவிகளை வழங்கினார்.

மூன்றாம் கட்டமாக இன்று செவ்வாய்கிழமை 12.03.24 பாகம் 48 டாக்டர் ரங்கா ரோடு மற்றும் கால்வாய்கரை தெரு (மந்தவெளி இரயில்வே ஸ்டேஷன்) ஆகிய பகுதிகளை சார்ந்த 120 பொதுமக்களுக்கு, மயிலை த. வேலு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் 123 வட்ட கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட, BLA2, BLC, அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியினை சிறப்பிக்க உள்ளனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! மேயர் பிரியா ராஜன் தலைமை!

# திரு.வி.க.நகர் வடக்கில் 571 பேர் பங்குபெறும் கோலப்போட்டி!

## அமைச்சர் பி.கீதாஜீவன் பரிசு வழங்குகிறார்!

சென்னை, மார்ச். 12

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க. நகர் வடக்கு பகுதியில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 571 பேர் பங்குபெறும் கோலப்போட்டி இன்று (12.3.2024 செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணி அளவில், நார்த் டவுன், ஸ்டீபன்சன் சாலை, செங்கை சிவம் பாலம் அருகில் நடைபெறுகிறது.

தலைமை செயற்குழு உறுப்பினர், மேயர் பிரியா ராஜன் தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் ப. தாயகம்கவி, பகுதிச் செயலாளர்கள் செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு மற்றும் சரிதா மகேஷ்குமார் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

புனிதவதி எத்திராசன், பெரம்பூர் ஆர்.ராஜன், எஸ். புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், ஜெ. மகிழரசன், த.வெங்கடேசன், ஏ.ரவி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் பெ.கீதாஜீவன் கலந்து கொண்டு 571 பேர் பங்குபெறும் கோலப்போட்டியை துவக்கி வைத்து பரிசுகளை வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, ப.ரங்கநாதன், இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, கே.எஸ்.ரவிச்சந்திரன், பி.எம்.யாழினி,

சங்கரி நாராயணன், தமிழன் பிரசன்னா, பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், எஸ்.மணிமுடி, பரிதி இளம் சுருதி, எம்.விஜயகுமார், என். பி.எம்.ஷேக் அப்துல்லா, வே.உமாகாந்த், கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.எம்.தேவன், புலவர் சாமிநாகப்பன், ஐ.சி. எப்.வ.முரளிதரன், ஏ.நாகராசன், கூ.பீ.ஜெயின், வே.வாசு, எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, டி.எஸ்.பி.ராஜகோபால், எம். டி.ஆர்.நாகராஜ், சொ.வேலு, வி.சுதாகர், ஸ்ரீராமுலு, பி.உதயசங்கர், பி.ஜே.துளசிங்கம், டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், ரமேஷ் (எ) நீலகண்டன், எஸ்.பன்னீர்செல்வம், கோ.மணி, எம்.இப்ராஹிம் கனி, ஆ.நிர்மலா தேவி, ஏ.பி.பூர்ணிமா, இரா.கலைச்செல்வி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

71 வது வட்டக் கழகச் செயலாளர் மா.ருத்ரமூர்த்தி நன்றி கூறுகிறார்.



சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதி, 54 (அ) வட்டத்தில் "மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருநாள் விழா சூரியச் சுடர் 51, 'வாழ்வோடு இணைந்தது கால்நடை' வரலாற்றில் நாம் முதல்வர் படை எனும் தலைப்பில் வட்டக் கழகச் செயலாளர் பா.கதிரவன் தலைமையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் 4 நபர்களுக்கு கன்றுகளுடன் நான்கு பசுக்களும், 171 கால்நடை வளர்ப்பவர்களுக்கு நலத் திட்ட உதவிகளையும் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார். விழாவில் மேயர் பிரியாராஜன், பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், 5 ஆம் மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு மற்றும் பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

எஸ்.கோபாலகிருஷ்ணன் ஏற்பாட்டில் கே.அங்குசாமி முன்னிலையில்

# மாதவரம் 15 வது வட்டத்தில் 500 பள்ளி மாணவ மாணவிகளுக்கு நல உதவிகள்!

## பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் வழங்கினார்!

சென்னை, மார்ச். 12

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 15 வது வட்டத்தில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

15 வது வட்டம், மணலி புதுநகர் பகுதியில் அமைந்துள்ள, சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளியில் சுமார் 570 மாணவ மாணவிகள் பயலுகின்றனர். இவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கோபாலகிருஷ்ணன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

வட்டச் செயலாளர் கே.அங்குசாமி முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் கலந்து கொண்டு பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகம், பரிட்சை அட்டை, பென்சில், பேனா மற்றும் பிஸ்கட் உள்ளிட்டவற்றை வழங்கினார்.

முன்னதாக பள்ளி மாணவ மாணவிகள் மத்தியில் முதலமைச்சரின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு கேக் வெட்டி குழந்தைகளுக்கு பரிமாறப்பட்டது.

மேலும் பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தில் உள்ள குழந்தைகளுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி கே. செல்வன் வட்டக் கழக நிர்வாகிகள் பி.டி.ரவிச்சந்திரன், வசீம் முகமது, தங்கராஜ், இ.எம்.மனோகரன், பக்தவச்சலம், ஜேசுராஜ் 16 வது வட்டம், எலந்தனூர் சிவப்பிரகாஷ், காமராஜ் புரம் கிருபாகரன், ரிஷி மற்றும் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஆசிரியர் பெருமக்கள் பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கோபாலகிருஷ்ணன் செய்திருந்தார்.



முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 15 வது வட்டத்தில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் வழங்கினார்.